ஹெல்த் சென்டர்ஸ், 405ல் 149—அட்டாக்ட்டு மொபைல் க்ளீனிக்ஸ் ஏற்படுத்தி இருக்கிறோம். மொபைல் க்ளீனிக்ஸ் ஏற்படுத்தியிருக்கிறோம். ஒவ்வொரு க்ளீனிக்கும் ரூ. 14,000ல் இருந்து ரூ. 20,000 ஆக மருந்துகள் வாங்கக் கூடிய நிலையை உயர்த்தியிருக்கிறோம். ரூ. 20,000க்கு வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த ரூ. 200 என்பது அவசரமாக திடீரென்று ஒரு மருந்து இல்லையென்று சொன்னால் உடனடியாக அதை வாங்கிக் கொள்ளத்தக்க வகையில்தான் செய்யப்பட்டிருக்கிறது. நோயாளிகளுக்கு கூடுதலாக மருந்துகள் கொடுக்க வாய்ப்பு இருக்கிறது.

போலியோ—தட்டம்மை போன்ற தடுப்பு ஊசிகளுக்கான மருந்துகள்.

*வினா எண். 294—திரு. செ. செம்மலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போலியோ—தட்டம்மை போன்ற தடுப்பு ஊசிகளுக்கான மருந்துகளை தனியார் அமைப்புகள் ஏதேனும் வழங்கி வருகிறதா ?

(ஆ) ஆம் எனில் வழங்கும் அமைப்புகள் எவை எவை ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) போலியோ தடுப்பு மருந்தை அரசின் கூட்டு நிறுவனமாகிய தமிழ் நாடு தாதா ட்ரக்ஸ் பார்மசூடிகல்ஸ் லிமிடெட், சென்னை -86 மற்றும் தனியார் நிறுவனமாகிய ஸ்பென்ஸர் அண்டு கம்பெனியும் வழங்குகிறது. தட்டம்மை போன்ற தடுப்பு ஊசித்திட்டம் அனைத்துலகு ரோட்டரி சங்கத்தினரால் நடத்தப்பட்டு வருகிறது.

திரு. செ. செம்மலை : இந்த நோய் தடுப்புப் பணிக்கு உலக சுகாதார நிறுவனம் ஏதாவது உதவி அளித்து வருகிறதா ? அப்படி உதவி அளிக்கிறது என்றால் நாம் அந்த உதவியை எந்தெந்த வகையில் பெற்று வருகிறோம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : டப்ள்யூ. எச். ஓ. நமக்கு உதவி செய்யவில்லை. ஆனால் ரோட்டரி க்ளப், அதுவும் கூட குறிப்பாக நம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அங்கு சென்று பேசி, சென்ற ஆண்டு அதற்கு பிறகு என்னைப் போய் பார்க்கச் சொல்லி அத்தனைபேர்களும் சேர்ந்து அவர்களிடத்தில் சென்று நாம் நிறைய வாங்கியிருக்

கிறோம், மீஸில்ஸ்க்காக. அதுகூட முதலில் அவர்கள் சந்தேகப் பட்டார்கள். பல மாநிலங்களில் கொடுத்து கெட்டுபோய் இருந்தது. ஆகவே உங்களால் பயன்படுத்த முடியுமா என்று கேட்டு நாம் அதற்கு ஒரு திட்டத்தைக் கொடுத்த பிறகு, அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டதற்குப் பிறகு, நம்மிடம் ஒப் படைத்திருக்கிறார்கள். பிறகு வந்து பார்த்து நன்றாக நடந்து கொண்டிருக்கிறது என்று மகிழ்ச்சியோடு சென்றிருக்கிறார்கள். நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் டப்ள்யூ.எச்.ஓ. கொடுக் காத காரணத்தால், நம் மாநிலத்திற்கு எவ்வளவு தேவை இருக்கிறதோ ஓரல் போலியோ வாக்ஸின் அதைவிட குறை வாகத்தான் இந்திய அரசு கொடுத்துக்கொண்டிருக்கிறது. என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுகின்ற கிராஸ் ப்ராகிராம் ஏதாவது அரசின் பரிசிலனையில் உள்ளதா? இப்போது அப்படிப்பட்ட சிறப்புத் திட்டம் ஏதேனும் நடை முறையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர் களே, நாம் அண்மையிலே மூன்று மாவட்டங்களில் இப்படிப் பட்டத் திட்டங்களை எடுத்துக் கொண்டோம். திருச்சி, தஞ்சை, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் அவ்வாறு எடுத்துக்கொண் டிருக்கிறோம். ஆனால் நமக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளைப் பற்றி நான் மிகத் தெளிவாக விளக்க விரும்புகிறேன்.
The total requirements in year for Tamil Nadu arc of the order of 50 lakh doses while we are receving 9 lakh doses
ஒரு மூன்று டோஸஸ் ஒரு குழந்தைக்குக் கொடுக்க வேண்டும். பூஸ்டர் டோஸஸ் என்றால் 4 டோஸஸ் கொடுக்க வேண்டும். நமக்கு 50 இலட்சம் டோஸஸ் தேவை. ஆனால் நமக்குக் கிடைக்கின்ற டோஸஸ் 9 இலட்சம் டோஸஸ்தான். இதனை முழுமையாகப் பயன்படுத்துகிறோம். நாம் வற்புறுத்தி இந்த ஆண்டு கொஞ்சம் ஜாஸ்தி கிடைத்திருக்கின்றது. சென்ற மூன்று ஆண்டுகளுக்கு முன்பு During 1980—81 Tamil Nadu received a supply of 3.86 lakh doses of oral pol o vaccine
இந்த ஆண்டு கிட்டத்தட்ட 9 இலட்சம் டோஸஸ் நமக்குக் கிடைத்திருகின்றது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் குழந்தைகளுக்கு தட்டம்மைத் தடுப்பு ஊசி என்று முன்பு போடுவார்களே அது தற்சமயம் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளதா? அந்தப் பணி கிராமங்களிலே நடைபெறவில்லையே, அவ்வாறு அம்மை குத்துகின்ற பணி செய்யப்படாததற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இந்த மீஸல்ஸ் வேக்ஸின் என்பதைப் பொறுத்த வரையில் 7 இலட்சத்து 60 ஆயிரம் டோஸஸ் இந்த ஆண்டு நாம் உபயோகப்படுத்தி இருக்கிறோம். இதற்குத் தேவை எவ்வளவோ அந்த அளவுக்குக் கிடைத்துக்கொண்டிருக்கின்றது.

தமிழ் நாட்டில் ஆரம்ப சுகாதார மையம் ஏற்படுத்தும் திட்டம்

*வினா எண். 295—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் புதிதாக ஆரம்ப சுகாதார மையம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஆம்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் நடப்பாண்டில் எத்தனை கட்டப்படுகின்றது ? இதற்கு அரசு எவ்வளவு ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டு 383 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருந்து இருக்கின்றன. இப்போது 1981-82-ல் 20 ஆரம்ப சுகாதார நிலையங்களை நாம் ஏற்படுத்தி இருக்கிறோம். ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் புதிதாக ஏற்படுத்துவதற்கு 11.5 இலட்சம் ரூபாய் செலவாகின்றது என்பதைத் தெரித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம்தான் இருக்கின்றது. கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்க வேண்டும் என்றால் எந்தத் தகுதியின் அடிப்படையில், எந்த கன்டிஷனில் ஆரம்பிக்கப்படுகின்றது ? இந்த ஆண்டு எவ்வளவு கட்டப்பட இருக்கின்றது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இந்த ஆண்டைப் பொறுத்த வரையில் பட்ஜெட் வந்ததற்குப் பிறகுதான் சொல்ல முடியும்.